பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

STAFF C... NOT FOR SALE

சுடர் 5 பிரமோதூத ஆவணி 30 உ சனிக்கிழமை (15-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 25 கதிர் 195

# பொருளாதார நெருக்கடியால் பிரேமா அரசாங்கம் திணறல்!

## 13 புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் 13 விடுதலைப் புலிகள் வீரமரணம் அடைந்தனர்.

அவர்களில் பத்துப் பேரின் விவரம் வருமாறு:-

✶ ரெஜினோல்ட் (விநாசித்தம்பி விநோகரன்– மாமூலை, முள்ளியவளை).

✶ கப்டன் ஆனந்தபாபு [ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் – பூவரசம்குளம் – வவுனியா].

✶ சுரேன் [சின்னத்துரை சுதாகர் – தம்பலகமம், திருமலை].

★ குணேஸ் [ஜெயரட்ணராஜா ஜெகநாதன் – ஊரிக்காடு, வல்வெட்டித்துறை].

★ நெப்போலியன் [சங்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கோட்டை மோதலில் 6 ராணுவ படகுகள் சேதம்

யாழ்ப்பாணம், செப். 15

கோட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் (வியாழன்) நடந்த சண்டையில் ஆறு இராணுவப் படகுகள் சேதமடைந்தன என்றும் – படகுகள் மூலம் யாழ் கோட்டைக்குள் புகுந்த துருப்புக்கள் அங்கு பீரங்கிகளையும் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கின்றனர் என்றும் – இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன என்று இந்திய வானொலி அறிவித்தது.

## கோட்டை வாசலில் டிரக் வெடி வைத்துத் தகர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 15

நேற்று முன்தினம் யாழ். கோட்டைப் பகுதியில் இடம் பெற்ற மோதல்களின் போது கோட்டை வாசலுக்கு வந்த டிரக் ஒன்றை விடுதலைப் புலிகள் வெடி வைத்துத் தகர்த்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் பண்ணைப் பகுதியில் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் மற்றொரு டிரக் சிக்கிச் சின்னா பின்னமானதாகவும், அதில் சிக்குண்டு படையினர்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## நீர்வேலி ஆலயம் மீதும் நேற்று விமானத் தாக்கு!

நீர்வேலி கந்தசுவாமிகோவில் மீதும், கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகள் மீதும் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

ஒரு குண்டு ஆறுமுகசுவாமி வாசலின் முன்பும், ஏனைய மூன்று குண்டுகளும் கடை ஒன்றுக்கு சமீபமாகவும் வீழ்ந்து வெடித்தன.

இதனால் கோவிலின் வாகனஅறையும், அருகிலிருந்த பாலர் நிலையம், சனசமூக நிலையம் என்பனவும் சேதமடைந்தன.

கடை ஒன்றும் பெரும் சேதத்திற்கு உள்ளானது.

(உ–72)

## சுயாட்சி தர மறுத்தால் ஈழப் போர் தொடரும்!

### கலாநிதி பாலசிங்கம் பேட்டி

லண்டன், செப். 15

ஸ்ரீலங்கா அரசு பிராந்திய சுயாட்சி முறையை நிராகரித்து இராணுவத்தீர்வைநாடுமானால் சுயநிர்ணய உரிமைக்காகவும், எமது தாயக நாட்டுக்காகவும் தொடர்ந்து போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழியேது மில்லை.

– இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

பி.பி.ஸிக்கு அளித்தபேட்டி ஒன்றிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஒலிபரப்பான இலங்கை பற்றிய தகவல் கண்ணோட்டத்தில் இந்தப் பேட்டி இடம்பெற்றது.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தச் செலவுகளுக்கு உதவுமாறு உலக நாடுகளிடம் கோரிக்கை

கொழும்பு, செப்டெம்பர் 15

வடக்கு, கிழக்கு யுத்தத்தினால் ஏற்பட்டிருக்கும் பெரும் செலவு, வளைகுடாப் பிரச்சினை ஆகியவற்றினால் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாத நிலையில் பிரேமதாசா அரசு திண்டாடத் தொடங்கியிருக்கிறது.

இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க உலக நாடுகள் எந்த வழியிலாவது உதவ முன்வர வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களை அழைத்து முன்கண்ட வேண்டுகோளை ஜனாதிபதி நேற்று விடுத்தார்.

நாட்டில் தீவிரவாதச் செயல்களை அடக்க அரசு ஏராளமாக பணம் செலவழித்து வருகின்றது; இந்தக் கட்டத்தில் வளைகுடா பிரச்சினை காரணமாக பொருளாதார நெருக்கடி பூதாகரமான நிலையை அடைந்திருக்கிறது.

— இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா மேலும் சொன்னார்.

(உ–எ)

## யாழ். நகரை அழிக்கும் முயற்சியில் நேற்றும் தொடர் வான் தாக்குதல்

நகரை அழிக்கும் முயற்சியாக –

யாழ் நகரின் பல பகுதிகளிலும் நேற்றும் – மாறி மாறி வந்த விமானங்கள் நாள்முழுவதும் குண்டுகளை வீசியபடியே இருந்தன.

இராட்சத சீனச்சகடையும் பொம்மர்களும், அவ்ரோவும் சலிக்காது தாக்குதல்களை நடத்திக் கொண்டேயிருந்தன ஹெலிகளும் அடுத்தடுத்து வந்து வேட்டுகளை தீர்த்தன.

யாழ் நகரின் பல இடங்களில் வீடுகள், கடைகள், கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

மக்கள் சில இடங்களில் வெளியேறியும், பதுங்குகுழிகளிலும் இருந்ததால் உயிரிழப்புகள் குறைவாகவே ஏற்பட்டன.

கட்டடங்கள் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் கோடிக்கணக்கில் இருக்கும் என உத்தேசமாகக் கூறப்பட்டது.

[ஒ–3]

## குடியிருப்பு பகுதியை நோக்கி நேற்றும் ஷெல், பீரங்கி தாக்கு

### இருவர் உயிரிழப்பு; பலர் காயம்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ். நகரை நோக்கி நேற்றும் ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. நேற்றைய தாக்குதலின் போது ஓர் இளைஞரும், முஸ்லிம் வயோதிபர் ஒருவரும் உயிரிழந்தனர். இன்னும் சிலர் காயமடைந்தனர்.

அதிகாலை 5மணியளவில் கோட்டையில் இருந்து வந்த வேட்டுக்கு அத்தியடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பலியானார்:

நடராசா விஸ்வநாதன் (வயது 28) என்பவரே அந்த இளைஞர் ஆவார்.

இவர் தமது வீட்டு முற்றத்தில் நின்றபடி மற்றொருவருடன் கதைத்துக் கொண்டிருந்த போது கோட்டைப் பக்கமாக இருந்து வந்த துப்பாக்கி வேட்டுக்கு இலக்கானார்.

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

யாழ் முஸ்லிம் பகுதியில் வந்து விழுந்த ஷெல்லுக்கு அப்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் வயோதிபர் ஒருவர் இரையானார். மீரான் சாகிப் (வயது 68) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மற்றும் இருவர் காயமடைந்தனர். சாகிப் லுக்மான் (வயது 38), அபுல் சலாம் சமீர் (வயது 16) ஆகியோரே

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சியில் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, செப். 15

கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணி முதல் நீக்கப்படும் என்று [illegible] இலங்கை வானொலி அறிவித்தது.

[ஓ–எ]

## யாழ்ப்பாணத்தில் ராணுவம் வீடு, வீடாகத் தேடுதலாம்!

### அதிகாரி தெரிவித்ததாகத் தகவல்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்ப்பாணத்தில் இராணுவம் வீடு, வீடாகத் தேடுதலை நடத்தி வருகின்றதாம்!

மிரண்டு போய் விடாதீர்கள்!!

இந்திய தொலைக்காட்சியான தூரதர்ஷனில்நேற்றிரவு அறிவிக்கப்பட்ட ஒரு செய்திதான்இது.

இலங்கைஇராணுவஅதிகாரி

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## RATHY WATCH WORKS

மேற்படி ஸ்தாபனம் 12, பொன்னையா லேன் (உபதபால் நிலைய அருகாமையில் பிடாரி கோவிலடி) ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இங்கு திருத்த வேலைகள் மணிக்கூடு பற்றறி, விற்பனைகள் நடைபெறுகின்றது என்பதையும் அறியத்தருகிறோம். [13937]

## Dilka Watch Works

யாழ் நகரில் சகல கடிகாரங்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள டில்கா வாச் வேக்ஸ், மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டை. (கிராமசபைக்கு அருகாமை)

(சகல எலக்றோனிக் கடிகாரங்களுக்குரிய பற்றறிகள் விற்பனைக்குண்டு) [14158]

## கோழித்தின்

கோழித்தின் வகைகள் கலந்தும், கோழித்தீன் மூலாதாரப் பொருட்கள் அரைத்தும் கொடுக்கப்படும். சிவா மில்ஸ் அன் இன்டஸ்றீஸ், 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [14187]

## இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

# 50ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்

**அமரர் செல்லத்துரை பாறுபதி**

தோற்றம்: 19 - 09 - 1919   மறைவு: 27 - 07 - 1990

திதி: 14 — 09 — 1990

வாழ வைத்ததெய்வம் வாடிவிட்டதேனோ!
எமை ஆழவைத்த தெய்வம் துயரந் தந்ததேனோ!
இமை போலாண்டு காத்த தெய்வம்
துயரந் தந்ததேனோ!
எமை பிரிந்து விட்டு நீரும் மேகம் சென்றதேனோ!
எம் அன்பு அம்மாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''..வயோகம்''
கன்பொல்லை வீதி,
நெல்லியடி. [14175]

# 2ஆம் வருட நினைவலைகள்



தாயின் மடியில்; 05 — 09 — 1966

இயேசுவின் மார்பில்: 14 — 09 — 1988

## ஷேளி ஜெயரூபன் லோறன்ஸ்

ஷேளியே எம்முன் நீ வாழ்கின்றாய்
நினைவில் அழியாத ஓவியமாய்
கனவிலும் கலையாத காவியமாய்
அலைகடல் மீதினில் அசையாத ஓடமாய்
எம் வாழ்வில் மலர்ந்திட்ட ஷேளியே!
உன் இனிய முகம் பாராவிடினும்
உன் நினைவு எம் சிந்தையில் நிற்குமையா
உன் இழப்பை ஈடு செய்ய முடியாமல்
தவியாய் தவிக்கும்

தகப்பன், தாய்,
சகோதரிகள், சகோதரன்,
உற்றார், உறவினர், நண்பர்.

'டல்சிலின்'
நாசலிங்கம் ரெறஸ்,
மானிப்பாய். [14176]

உங்கள் அந்தியகால நண்பன்!

**''பிறைற் ஹவுஸ்''**

இப்பொழுது யாழ் - பிரதான வீதியில் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்திற்கு அருகே சென். பற்றிக்ஸ் வீதிச்சந்தியில் இடம் மாற்றப்பட்டுள்ளதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறார்கள்!

**பிறைற் ஹவுஸ்**
**326, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.** [14200]

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி வசந்தி தளையசிங்கம்

தோற்றம்: 26 - 04 - 1950   மறைவு: 15 - 09 - 1985

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்புத் தீபம் ஏற்றி வைத்தாய்
தந்தை தாய் பணிசெய்தே
நன்மகள் பேறுபெற்றாய்
பாசமுள்ள சோதரர்களை
பற்றுடனே நீர் வளர்த்தாய்
எமையெலாம அரவணைத்து
அன்பினால் கட்டி விட்டாய்
இல்லறத்தில் இனியவளாய்
இனிதே நீ வாழ்ந்து
ஓராண்டு மறைவதற்குள்
நீ வாழ்ந்த பெருமையினை
கண்டு விட்ட காலனும்
அதிர்ந்து விட்டானோ
எம் துயர் போக்கிடவே
இன்னொரு இனியமகளாய்
எம் குடும்பத்தில்
வந்திங்கு அவதரிக்கமாட்டாயோ

**பெற்றோர், சகோதரர்கள்.**

மார்க்கண்டு ஞானசுந்தரம்,
கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில் [14198]

# 4ஆம் ஆண்டு அன்புத்தாயின் நினைவு



## கந்தையா நல்லம்மா

நான்கு ஆண்டுகள் உருண்டு ஓடி விட்டது தாயே! என்றும் உங்கள் நினைவாகவே இருந்து உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

க. பூபாலசிங்கமும்,
மனைவி,
மக்களும்,
பேரப்பிள்ளைகள்.

பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு,
[சி-5194]

# கிழக்கு மாகாண பிரச்சினை

கிழக்கு மாகாணப் பிரச்சினைக்கு தமிழர், முஸ்லிம்கள் விரும்பும் விதத்தில் தீர்வு ஒன்றைக் கண்டு, அதனைச் செயல்படுத்த ஜனாதிபதி தயாராக இருக்கிறார் என வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் தெரிவித்தார் என கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது

கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஆதரவின்றி முஸ்லிம்களோ, முஸ்லிம்களின் ஆதரவின்றி தமிழரோ வாழமுடியாது என்றும் அமைச்சர் மன்சூர் சொன்னார். [இ-எ]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

சம்பத்திரிசியார் கல்லூரியில் வீழ்ந்த
இராட்சதக் குண்டால் அகால மரணமடைந்த

## அமரர் கணபதி அருளானந்தம்

(சித்தப்பா பாஷையூர் வான்சாரதி)

தோற்றம்: 07 — 04 — 1950   மறைவு: 16 — 08 — 1990

எங்களுடைய அன்பே! செல்வமே என் கணவா!
தங்கும் மக்களையும் பரிதவிக்கும் என்னையுமே
மங்கும் மலைக்குண்டு மாள்சவுமைச் செய்ததுவே
பொங்கும் எங்கண்ணீர் என்றுமே சொரிகிறதே
எங்களுடைய இதயச் சுமை நீக்குவார் யார்!

ஆன்மா சாந்தி பெறுக

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், தந்தை, மருமக்கள்,
பெறாமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

46, இராசேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். [14199]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் கார்த்திகேசு திருஞானசம்பந்தர்

(நயினாதீவு)

(ஓய்வு பெற்ற நில அளவையாளரும் யா/தொழில் நுட்பக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளரும்)

தோற்றம்: 13 — 06 — 1938   மறைவு: 16 — 08 — 1990

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய் கல்வியே கண்ணாய், குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து அணைந்து விட்ட எங்கள் அன்புத் தெய்வமே அப்பா! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டீர்களே அப்பா! இனி எம்மை யார் துணை நின்று காப்பாற்றுவார்கள்? எங்களை வழி நடத்த தெய்வமான உங்களையே வேண்டுகிறோம். ஆனாலும் அப்பா! நீங்கள் இல்லாத வெற்றிடத்தை யார் துணை நின்றாலும் நிரப்ப இயலாமல் எங்கள் இதயங்கள் ஏங்குகின்றன. புவியில் வாழ்ந்திடும் கால எல்லை இன்னும் தான் இருக்க, பட்ட பாட்டின் பலனைக் காணும் முன்னே தங்களை பலவந்தமாக பறித்தவன் யாரோ? உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் உயிர் உள்ளவரை ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் தவிக்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

467 (199) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [13856]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STAFF NOT FOR SALE

# ஈழத்தில் புரட்சி வெடிக்க திலீபன் விடுத்த அறைகூவல்!

ஈழத் தமிழரின் உரிமைக்காக 13 நாட்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர்த்தியாகம் செய்த தியாகி திலீபன் தனது உண்ணாவிரதத்தை ஆரம்பித்த மூன்றாவது ஆண்டு பூர்த்தி தினம் இன்றாகும்.

இன்று முதல் அடுத்து வரும் பன்னிரண்டு தினங்களையும் தியாகி திலீபன் காட்டிய உறுதி வழியில் ''உரிமைக்கான உறுதிப்பாட்டை'' வெளிப்படுத்தும் தினங்களாக ஈழத் தமிழர் அனுஷ்டித்து வருகிறார்கள்.

இத்தினத்தில் தனது உண்ணாநோன்பின் இரண்டாம் நாளின்போது நோன்பு கைக்கொண்ட மேடையில் இருந்து கொண்டே திலீபன் ஈழ மக்களுக்கு ஆற்றிய உரையை இங்கு மீட்டுப் பார்ப்பது பொருத்தமான தாகும்.

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்! நிற்க வலுவில்லை. இருந்து கொண்டே பேசுகிறேன். நாளை நான் சுய நினைவோடு இருப்பேனோ தெரியாது. அதனால் தான் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம். ஏற்கனவே 650 பேர் இலட்சியத்துக்காக மரணித்துவிட்டார்கள்.

மில்லர் கடைசியாகப்



போகும்போது என்னிடம் ஒரு வரியைக் கூறினான், ''நான் எனது தாய் நாட்டிற்காக உயிரைக் கொடுக்கப்போவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால் ஒரே ஒரு ஏக்கம் எனது மக்கள் விடுதலை அடையும் காட்சியை என்னால் காண முடியாமற் போகிறதே என்பதே அந்த ஏக்கமாகும்'' எனக் கூறிவிட்டு வெடிமருந்துகளைக் கொண்ட வாகனத்தில் ஏறிச் சென்றான்.

எனக்கு முன் சென்ற 650 பேரும் எனக்குத் தெரியவே இறந்தனர். அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்பதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். நான் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப்போவதாக தலைவரிடம் அனுமதி கோரிய போது ''திலீபன் நீ முன்னால் போ. நான் பின்னால் வருகிறேன்'' எனக் கூறி எனக்கு உற்சாகம் ஊட்டினார். அவ்வளவு தூரம் தெளிவான தலைவர் உங்களுக்குக்கிடைத்துள்ளார்,

இப்போது விளங்குகிறது எனக்கு என் தலைவரின் கொள்கைப் பிடிப்பு.

தாய்மார்களே!

பெரும் வீரனின் தலைமையில் நீங்கள் கிளம்புங்கள்! ஓர் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! நாங்கள் நிச்சயமாக தமிழீழம் காண்போம். அதை வானிலிருந்து எனது 650 தோழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன் என மனரீதியாக தற்போது நான் உணர்கிறேன்' என் மக்கள் நிச்சயம் தமிழீழம் காண்பார்கள்.

எமது மக்களின் விடிவிற்காக நான் பூரண மனத்திருப்தியுடன் இவ் உண்ணாவிரதத்தில் இறங்கினேன். விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் தமது உயிரிலும் மேலாக இங்குள்ள மக்களை நினைக்கிறார்கள். தெளிவான உறுதியான இலட்சியத்துடன் இருக்கிறார்கள். எமது இறுதி இலட்சியத்தை தலைவருடன் இணைந்து நீங்கள் அடையவேண்டும் என்பது எனது இறுதி ஆசை வணக்கம்.

# சகடைக் குண்டு வீச்சால் அரசடி வீதியில் பெரும்சேதம்

யாழ்ப்பாணம், செப். 15 யாழ். நகருக்கு நேற்று பல தடவைகள் வந்த சீனச் சகடை விமானம் பெருமளவு குண்டுகளை போட்டது.

அவற்றில் ஒரு குண்டு நேற்று நண்பகலளவில் யாழ். பிறவுண் வீதி- அரசடிச் சந்திக்குச் சமீபமாக விழுந்து வெடித்தது.

இதனால் மூன்று வீடுகள் தரை மட்டமாகின. மூன்று பலசரக்குக் கடைகளும், இன்னும் பத்து வீடுகளும் சேதமுற்றன. மின்சாரசபை அலுவலகமும் பாதிப்புற்றது.

குண்டு விழுந்த இடத்தில் பாரிய குழி ஒன்று காணப்பட்டது.

பொதுமக்கள் அப்பகுதியில் இருந்து ஏற்கனவே இடம் பெயர்ந்திருந்ததால் உயிர் இழப்புகள்தவிர்க்கப்பட்டன [ஒ-5-6-143]

## நகரில் கிறிஸ்தவ ஆசிரமம் சேதம்

யாழ்ப்பாணம், செப். 15 நேற்று முன்தினம் (வியாழன்) மாலை இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலில் யாழ். கோவில் வீதியிலுள்ள கிறிஸ்தவ ஆசிரமமும் சேதமடைந்தது.

அருள் ஆசிரமத்தில் இருந்த சகோதரர் மனுவல் பீற்றர் போல் [வயது 24], எஸ். போல் ஆகியோர் காயமடைந்தனர்.

சுண்டுக்குளியில் விழுந்த ஷெல்லுக்கு அதே இடத்தைச் சேர்ந்த சி. சுமித்திராதேவி [வயது 20] என்பவர் காயமடைந்தார். [ஓ-15]

## யாழ்ப்பாணத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் இப்படித் தெரிவித்தார் என்றே அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தேடுதலின்போது விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் அவ்வப்போது ''கைகலப்பு'' இடம்பெற்று வருவதாகவும் ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி கூறினார் என்றும் அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டது. [ஒ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 15 திருமலையில் கடந்த புதனன்று தவறுதலாக நிகழ்ந்த வெடி விபத்தில்காயமுற்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி றொபின் நேற்று முன்தினம் வீரமரணமடைந்தார். [உ]

## 13 புலிகள் வீர- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரசிவம் விக்னேஸ்வரன் - தாவடி];

★ நிவாஸ் (சின்னத்தம்பி இராமச்சந்திரன் - பழுகாமம் மட்டக்களப்பு).

★ றொபின் (பேரின்பராசா கணேஸ்- மூன்றாம் வாய்க்கால், பரந்தன்).

★ குருபரன் (ஓட்டுமடம்)

★ தமிழ்ச்செலவன்

★ பெண்புலி கப்டன் அஞ்சலா (வட்டக்கச்சி).

கோட்டை மோதலின் போது பின்வரும் ஆயுதங்களைத் தாங்கள் கைப்பற்றியதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்,

ரி. 56-1, சிக்னல் பிஸ்டல்-1, 203 ரக ஷெல்-24, ஆர். பி. ஜி. ஷெல்-4, மினி கிளைமர்-1, மினி எக்ஸ்புளோடர் - 1, ரவைகள் - 500, தண்ணீர்ப் போத்தல்-4.

வீரமரணமடைந்த போராளிகளில் பத்துப் பேர்களது பூதவுடல்கள் நேற்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையானோர் சோகம் ததும்ப தமது அஞ்சலியைச் செலுத்தினர். (உ-ஓ-72)

## கோட்டை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பலர் உயிரிழந்ததாகவும் புலிகள் வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. அறிவித்தது.

இதேசமயம் கோட்டைப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளின் சினைப்பர் தாக்குதலினால் இரு படையினர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# அரிசிக்கு விலை நிர்ணயம்!

யாழ்ப்பாணம், செப். 15 எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் யாழ் மாவட்டத்தில் அரிசி விற்பனை செய்வதற்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

இதன்படி நாட்டரிசி (குத்தரிசி) கிலோ 25 ரூபாவுக்கும் திட்டற் பச்சை அரிசி கிலோ 25 ரூபாவுக்கு சிவப்புப் பச்சை அரிசி கிலோ 23 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும்.

இதேவேளை—

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாலேயே அரிசி, நெல் கொள்வனவு செய்யப்படவேண்டும் என்ற முன்னைய அறிவித்தல் இன்றுடன் தளர்த்தப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது,

இதன்படி தனியாரும் இனிமேல் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நெல், அரிசி ஆகியவற்றைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யமுடியும்,

—இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அமைப்பாளர் திரு. ப. மூர்த்தி தெரிவித்தார். (உ)

# செஞ்சிலுவை சங்க அலுவலகம் முன் இன்று உண்ணாவிரதம்

தமிழ்ப்பிரதேசத்தில் ஐ. நா சபையின் ஆதரவுடன் அகதி முகாம் அமைப்பதைக் கண்டித்து இன்று சனி காலை ஒன்பது மணி முதல் அடையாள உண்ணாவிரதத்தை நடத்த தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் ஏற்பாடுகள் செய்துள்ளது.

கோவில் வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அலுவலகத்துக்கு முன்பாக இந்த உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ 30]

# பொம்மர் சுட்டு வீழ்த்தப்பட்டதை அதிகாரி ஒப்புக்கொள்கின்றார்

கொழும்பு, செப். 15 யாழ். கோட்டைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை நடந்த சண்டையில் இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சு விமானம் ஒன்றை விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் சுட்டு வீழ்த்தியதை இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்.

கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி இந்திய வானொலி நேற்று இதனை அறிவித்தது.

அந்த விமானம் தாழ்வாகப் பறந்து குண்டு வீச்சு நடத்துவதில் ஈடுபட்டிருந்தபோது போராளிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டதை அந்தஇராணுவ அதிகாரி ஒப்புக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வியாழன் நடந்த சண்டையில் 24 படையினர் உயிரிழந்தனர் என்றும் — அவர்களில் 5பேர் அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும்—

மேலும் 100 சிப்பாய்கள் வரை காயமுற்றனர் என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

பண்ணை, பொலீஸ் விடுதிகள் பகுதி ஆகியவற்றை படையினர் வியாழன் மாலை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றும்—

இனித்தொலைத் தொடர்புத் திணைக்களம், ஆஸ்பத்திரி ஆகிய பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் படையினர் ஈடுபடுவர் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## குடியிருப்பு பகுதியை- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தவர்கள் ஆவர். இதேவேளை—

நேற்று பல இடங்களிலும் இடம்பெற்ற தாக்குதல்களின் போது காயமடைந்த சிலர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்கள் விவரம் வருமாறு:

ந. நந்தகுமார் (வயது 26)- அரசடி, ப. பரமேஸ்வரன் (வயது 33) - யாழ்., க. சின்னத்துரை (வயது 43)-யாழ்., ந. பரமேஸ்வரி (வயது 48) - இருபாலை, உமா சங்கரி (வயது 26) - தட்டாதெரு, செல்வி சுந்தரம் (வயது 20)- சுண்டுக்குளி, விஸ்வநாதன் (வயது 28) - சுண்டுக்குளி, து. ரவீந்திரன் (வயது 35) - அரசடி. [ஓ-25-3-5]

## சுயாட்சி தர--

கலாநிதி பாலசிங்கத்தைத் தாம் பேட்டி கண்டதாக பி.பி.ஸி செய்தியாளர் இந்நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்.

இந்தப் பேட்டியின்போது ஈழப் பிரச்சினையில் இந்தியத் தரப்புத் தலையீடு தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் கலாநிதி பாலசிங்கம் கூறியதாவது :-

இந்தச் சண்டையில் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு பெரும் அளவில் அகதிகள் வந்து குவியும் நிலை ஏற்பட்டிருப்பதுகுறித்தும் இந்தியாதனது பெரும் கவலையை வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் இந்தவிடயத்தில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிடுவதை நாம் முற்றாக எதிர்க்கிறோம். கடந்த காலத்திலும் இத்தகைய தலையீடு பெரும் அழிவு மிக்க பெறுபேறுகளையே தந்திருக்கிறது.

இந்தப் பிரச்சினையில் இந்தியா ராஜீக ரீதியில் தலையிட வேண்டும் என்ற யோசனையை நாம் சாதகமாக வரவேற்கிறோம்.

கேள்வி;- சுதந்திரம், தனிநாடு ஆகியவற்றுக்குக் குறைந்த ஏதேனும் ஒன்றை ஏற்க விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்களா?

கலாநிதிபாலசிங்கம்:- யுத்த நிறுத்தத்திற்கோ, பேச்சுவார்த்தைக்கோ நாம் எந்தவித முன் நிபந்தனையும் விதிக்கவில்லை.

ஆனால் முதலில் நாங்கள் ஆயுதங்களை ஒப்படைத்தால் தான் யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை என்று ஸ்ரீலங்கா அரசுதான் முன் நிபந்தனை விதித்திருக்கிறது.

இந்த நிபந்தனை எம்மால் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தக் கூடிய தன்னாட்சி முறைக்கான - தகுந்த - யோசனை ஒன்றை ஸ்ரீலங்கா அரசு முன்வைத்தால் நாம் அதனைப் பரிசீலிக்கத் தயார்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு பிராந்திய சுயாட்சி முறையை நிராகரித்து இராணுவத் தீர்வை நாடுமானால் சுயநிர்ணய உரிமைக்காகவும் எமது தாயக நாட்டுக்காகவும் தொடர்ந்து போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழி ஏதுமில்லை - என்றார். [உ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுக் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் பரவும் ஆபத்து

யாழ்ப்பாணம், செப். 15 யாழ். குடாநாட்டில் தற்போது குழந்தைகளுக்கு வயிற்றோட்ட நோய் பரவும் ஆபத்து உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாயில் உள்ள யாழ் போதனா ஆஸ்பத்திரியில் நேற்று மட்டும் இரு குழந்தைகள் இந்நோயினால் மரணமாகியுள்ளன. 9 குழந்தைகள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பண்டைதீவைச் சேர்ந்த யேசுதாசன் அருள்நேசன் (நான்கு மாதம்), நல்லூரைச் சேர்ந்த செல்வராசா விகினா (ஒன்பது மாதம்) ஆகிய இரு குழந்தைகளுமே நேற்று உயிரிழந்தன.

மேலும் வேதநாயகம் சுஜான் (வயது 2) -பரந்தன், முருகையா ராஜ்குமார்(வயது 1) - மூளாய், பாலசிங்கம் ஆனந்தராசா (வயது 3) -அல்வாய்தெற்கு, ஜெகசோதி ஜெயதாஸ் [வயது 1] – வயாவிளான், ஸ்ரீவிஜயம் சயந்தன் (வயது 2) – கொக்குவில், சத்தியபாலன் அநுரதன் [வயது 2] – மண்டைதீவு, தர்பராசா தர்மேந்திரன் (வயது 1) - கந்தர்மடம், தனநாயகம் நிருசியா [வயது 2] – மண்டைதீவு, தனநாயகன் நிரேசன் [வயது 4] - மண்டைதீவு ஆகிய குழந்தைகளே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

கொதித்து ஆறிய நீரையே குழந்தைகளுக்குக் கொடுப்பதன் மூலம் இந்நோயைத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க முடியும் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-15]

## பிரதமர் சிங்-ஜா பேச்சு

கொழும்பில் உள்ள இந்திய தூதர் திரு நாகேந்திரநாத் ஜா நேற்று புதுடில்லியில் பிரதமர் வி. பி. சிங்கைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

ஈழத்தமிழ் அகதிகளை இலங்கையிலே – அகதி முகாம்களில் தங்க வைத்து பாராமரிக்கும் யோசனை குறித்து ஜனாதிபதி பிரேமதாசாவுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றி விவரங்களை திரு. ஜா, பிரதமரிடம் எடுத்துச் சொன்னார் என்று தெரிவிக்கப் பட்டது. [ஓ-எ]

## குடாநாட்டில் ஹெலிகள் நேற்றும் கண்டபடி தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 15 யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று ஹெலிகள் கண்டபடி தாக்குதல்களை நடத்தின.

வீடு, வாசல்களில் நின்றோரையும் தேடித் தேடி அவை வேட்டுக்களைத் தீர்த்தன.

இதனால் ஹெலிகளைக் கண்டவுடன் மக்கள் மறைவிடங்களில் பதுங்கிக் கொண்டனர்.

கொக்குவில், சுதுமலை, தாவடி, சுன்னாகம், கட்டப்பிராய், கல்வியங்காடு, செம்மணி போன்ற பல பகுதிகளிலும் தாக்குதல்கள் இடம் பெற்றன. [ஒ-6-143]

## "சாம்-7" ஏவுகணையே பொம்மரை வீழ்த்தியது

லண்டன், செப். 15 நேற்று முன்தினம் யாழ். கோட்டைப் பகுதியில் இடம் பெற்ற மோதல்களின் போது ஸ்ரீலங்கா விமானப் படையின் பொம்மர் ஒன்று சுட்டு வீழ்த்தப்படுவதற்கு ''சாம் 7'' ஏவுகணையே உபயோகிக்கப்பட்டது.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றுக் காலை அறிவித்தது.

ஆனால் இத்தகவல் உண்மையா என்பதைத் தம்மால் ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை என்று அச்செய்தியை அனுப்பிய பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் தம் செய்தியில் குறிப்பிட்டிருந்தார். [உ]

## யாழ். முஸ்லிம் பகுதி மீது சீனச் சகடையின் கண்!

யாழ்ப்பாணம், செப். 15 யாழ்ப்பாணம், முஸ்லிம் வட்டாரப் பகுதி மீது நேற்றும் சீனச் சகடை விமானம் மூர்க்கமான முறையில் குண்டுகளை வீசியது.

இதனால் இப்பகுதியில் பெரும் சேதங்கள் ஏற்பட்டன. பெருமளவிலான வீடுகள் தகர்ந்து மண்ணோடு மண்ணாகிப் போய்விட்டன. பெரும்எண்ணிக்கையான வீடுகள் சேதமுற்றன.

அவ்ரோவும் இப்பகுதியில் பீப்பாய்க் குண்டுகளைப் போட்டது.

நேற்று மாலை முஸ்லிம் வட்டாரப் பகுதி சுடுகாடு போல் காணப்பட்டது (ஒ 6)

## போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 15 வன்னிப்பகுதியில் தொடர்ந்து பெய்யும் மழையால் கொம்படிப் பாலப்பாதைப் போக்குவரத்துக்கள் தடைப் பட்டுள்ளன. (இ-3-6)

## தலைமன்னார் முகாம் மீது கடும் தாக்கு

யாழ்ப்பாணம், செப். 15 தலைமன்னார் கடற்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 5.30 மணிக்குத் தொடுத்த நேரடித் தாக்குதல் நடவடிக்கையின் போது 2 ஆம் லெப்ரினன்ட் ரகுபதி, 2 ஆம் லெப்ரினன்ட் நவாஸ் ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர். [உ]

## மட்டுநகரில் சிப்பாய் பலி

மட்டக்களப்பு நகரத்தில் இராணுவத்தினர்மீது கடந்த வியாழனன்று விடுதலைப் புலிகள் நடத்திய கிரனேட் வீச்சுத் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் உயிரிழந்தார். மற்றொருவர் காயமுற்றார்.

இதே சமயம் கடந்த புதனன்று உன்னிச்சைப் பகுதியில் புலிகளின் பொறிவெடியில் சிக்கி 2 இராணுவத்தினர் கால்களை இழந்ததா தெரிவிக்கப்பட்டது. [உ]

## இன்று திலீபன் தினம்

யாழ்ப்பாணம், செப். 15 தியாகி திலீபன் உண்ணா நோன்பு ரம்பித்தமூன்றாம் ஆண்டு நிறைவு தினமான இன்று காலை 10 மணிக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல மத ஸ்தலங்களிலும் மணிகளை ஒலித்தும், மக்கள் தமது கடமைகளை நிறுத்தி மௌனம் சாதித்தும் இரண்டு நிமிட அஞ்சலி செலுத்துமாறு வி. பு. ம. முன்னணியினர் கேட்டுள்ளனர்.

வீரமரணமடைந்த போராளிகளுக்கும், மரணித்த மக்களுக்கும் அஞ்சலி அனுஷ்டிப்பதற்கு அடையாளமாக இதனைச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. [உ]

## தமிழகத்துக்கு 510 அகதிகள்

சென்னை, செப். 15 பதின்மூன்று படகுகளில் 510 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று நாகபட்டினம் போய்ச் சேர்ந்தனர் என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-எ)

# மரண அறிவித்தல்கள்

## டானியல் தேவசகாயம் [டீ. எஸ்.]

[யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூட பிரதம தொழில் நுட்பவியலாளர்] [Chief M. L. T]

டானியல் தேவசகாயம் 14-09 90 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி. தேவசகாயம் பிலோமினா [ஆசிரியை பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம்] அவர்களின் அன்புக் கணவரும்; யூட், மேரி சந்திரலதா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற D. எட்வேட், D. சேவியர் [புஷ்பம்] ஆகியோரின் சகோதரரும், யூ. மாகிறேற், ஏ. மலர், மாணிக்கராசா, யோசவ்வாஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று [14-09-90] வெள்ளிக்கிழமை நண்பகல் 12. 00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

20, புங்கங்குளம் வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம். [14202]

தகவல்:
டா. எ. க, சுகுமார்.

## திரு. சுந்தரம்பிள்ளை பாலரட்ணம்

பாண்டியன்தாழ்வு [சுண்டிக்குளி] யைச் சேர்ந்தவரும் கல்வியன்காட்டில் வசித்தவருமாகிய சுந்தரம்பிள்ளை பாலரட்ணம் [இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா லிகிதர்] மானிப்பாயில் காலமானார்.

இவர் காலம் சென்ற சுந்தரம்பிள்ளை–செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், இந்திராணியின் அன்புக்கணவரும், சுந்தையா, காலம் சென்ற தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், சுதர்சன் (Mascons Farm), அனுருபா (அவுஸ்திரேலியா), கம்சியா ஆகியோரின் அருமைத்தந்தையும், இந்துமதி [ஆசிரியை, அராலி இந்துக்கல்லூரி], பேரானந்தன் [பொறியியலாளர், அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம் சென்ற தில்லைநாதர் (S. P. H. I), பொன்னுந்துரை (R. M. P.) ஆகியோரின் சகோதரரும், காலம்சென்ற கனகம்மா, பூமணி ஆகியோரின் மைத்துனரும், டிலானி, சர்மிளா, கிருஷ்ணானந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-09-90 மாலை 6 மணி அளவில் செம்மணி மைதானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. சுதர்சன்

சிங்கராயர் வீதி,
கல்வியன்காடு. [14201]

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் ச. விக்னேஸ்வரன்

(விக்னா, நெப்போலியன்)

த. சங்கரசிவம் மகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் விக்னேஸ்வரன் 13-09-1990 வியாழக்கிழமை கோட்டை இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணம் அடைந்துவிட்டார்.

இவர் சேதீஸ்வரன் (சுவிஸ்), மதுரைமீனா, புனிதமீனா, செல்வமீனா, கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று காலை 10 மணிக்கு தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
த. சங்கரசிவம் [தந்தை]
ஸ்ரீ விக்னேஸ்வரா
ஸ்ரான்லி வீதி.

தாவடி,
கொக்குவில்.
[14203]

## சங்கரலிங்கம் யோகசேகரன்

கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சங்கரலிங்கம் யோகசேகரன் 13-09-1990 இல் அகாலமரணமானார்.

அன்னார் சங்கரலிங்கம் இந்திராதேவி தம்பதிகளின் அன்புமகனும், சந்திரசேகர், கயந்தினி, கயசேகரன், அயந்தசேகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-09-1990 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ. சங்கரலிங்கம்
[கரன் ரேடிங் சென்ரர்,
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்]

ஆடியபாதம் வீதி,
கொக்குவில். [14204]

## மாணிக்கவாசகர் கந்தையா

[ஓய்வுபெற்ற விதானையார்]

மறவன்புலோ, கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னைநாள் விதானையாரும் ஆகிய மாணிக்கவாசகர் கந்தையா 14-9-90ல் காலமானார். அன்னார் காலம் சென்ற கந்தையா தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், காலம்சென்ற மணிவாசகன்[பொறியியலாளர்], மனோகரன், மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதிகள் விமலா, காலம் சென்ற ஞானாம்பிகை, பத்மநாயகி, குகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், திருபதி அன்னபூரணி தியாகராசா, காலம் சென்ற திருமதி தங்கம்மா பொன்னையா, திரு. பொன்னம்பலம் [ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்] ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [15-9-90] இன்று சனிக்கிழமை ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. மனோகரன்

கைதடி—நாவற்குழி,
கைதடி. [13859]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org